# அத்துரலிய பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

---------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

--------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 29 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

---------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான அத்துரலிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

---------------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

----------------------------------------

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களுடன் அக் கணக்குகள் தயாரிக்கும் போது கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2005 திசெம்பர் 01 திகதிய இலக்கம் 1421/26 கொண்ட இலங்கை குடியரசின் அதிவிஷேட வர்த்தமானி அறிக்கையின் பிரகாரம் அத்துரலிய பிரதேச சபை நிருவப்பட்டதுடன், அக்குரஸ்ஸ பிரதேச சபையினால் அத்துரலிய பிரதேச சபைக்கு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சாட்டப்படும் போது அக்குரஸ்ஸ பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டிய கடன்தொகை ஒன்றென குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 675,576 தொகையினை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கலஞ்சிய பண்டங்கள் மற்றும் பொருட்கள் பெறுவனவுகள் மற்றும் வழங்குதல் தொடர்பாக குறிப்பிட்ட படிவங்கள் பயன்படுத்தப்பட்டு செலவுகள் பகுப்பாய்வு ஒன்றின் மூலம் குறிப்பிட்ட செலவுத் தலைப்புக்களுக்கு வரவு வைத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் பேரேட்டின் ஆரம்ப இருப்புக்கு கொள்வனவுகள் கூட்டப்பட்டு இறுதி இருப்பு சீராக்கல் செய்யப்பட்ட பின்னர் காணப்பட்ட வித்தியாசம் வருமானச் செலவுக் கணக்கில் ரூபா 1,522,366 இற்கான செலவுகள் என பதிவு செய்யப்பட்டுள்ளது.

1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 04 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 972,440 ஆக காணப்பட்டதுடன் துணைப் பதிவேடுகள்/ பட்டோலைகளின் பிரகாரம் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 979,136 ஆக காணப்பட்டமையால் வித்தியாசம் ரூபா 6,696 ஆகும்.

1.3.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்திருந்த பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,431,812 ஆகும்.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்திருந்த செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,771,141 ஆகும்.

1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-------------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான ரூபா 19,743,047 பெறுமதியான காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்த கணிப்பீட்டுச் சபை அறிக்கை காணப்படவில்லை.

1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| | விதி 218 | காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு வருடத்திற்கு ஒரு முறையேனும் பரிசோதனை மேற்கொள்வற்காக தலைவரினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | 2002 நவம்பர் 28 திகதிய இலக்கம் 2002/02 கொண்ட திறைசேரி செயலாளரின் சுற்று நிருபம் | கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருள் கருவிகள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 167,516 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,428,210 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு தொடர்பாக தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி மற்றும் வரி | 1,044 | 1,195 | 541 |
| வாடகை | 1,997 | 2,100 | 117 |
| ஏனைய வருமானங்கள் | 14,732 | 13,608 | 16,520 |

2.2.2 வீத வரி மற்றும் வரி

----------------------------------------

மீளாய்வாண்டிற்கான பில் போடப்பட்ட வீதவரி ரூபா 693,357 ஆகக் காணப்பட்டதுடன் 2013 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 405,550 ஆகக் காணப்பட்டது. நடைமுறை ஆண்டிற்கான பில்போடப்பட்டவையின் மூலம் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட தொகை ரூபா 390,070 ஆகக் காணப்பட்டதுடன் அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 56 ஆகும். 2013 ஜனவரி 01 இல் உள்ளவாறு நிலுவைத் தொகையில் இருந்து இவ்வருடத்தின் போது பெற்ற தொகை ரூபா 184,904 ஆகக் காணப்பட்டதுடன் அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 45 ஆகும்.

2.2.3 ஏக்கர் வரி

------------------

மீளாய்வாண்டிற்கான பில்போடப்பட்ட ஏக்கர் வரி ரூபா 13,255 ஆகும். 2013 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவைத் தொகை ரூபா 31,886 ஆகும். 2013 ஆண்டின் போது பில்போடப்பட்டவற்றில் ஆண்டின் போது கிடைத்த தொகை ரூபா 6,864 ஆகும். அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 51 ஆகும். 2013 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவைத் தொகையில் இவ் ஆண்டின் போது கிடைத்த தொகை ரூபா 1,723 காணப்பட்டதுடன் அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 5 ஆன சிறு பெறுமதியே ஆகும்.

2.2.4 முத்திரைக் கட்டணம்

-----------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய முத்திரைக் கட்டணத்தின் பெறுமதி ரூபா 2,318,289 ஆகும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-------------------------------------------------------

(அ) 2005 மார்ச் 31 திகதிய 08/2005 இலக்க பொது நிருவாக செயலாளரின் சுற்று நிருபத்தின் 11.5 பிரிவின் பிரகாரம் ஆதனக் கடனுக்கான வங்கி வட்டிவீதம் மற்றும் அலுவலர்களிடம் அறவிடப்படும் நூற்றிற்கு 4.2 வட்டி வீதத்திற்கு இடையிலான வித்தியாசம் அரசினால் மீளளிப்புச் செய்யப்பட வேண்டும். அவ்வாறாயினும் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அவ்வாறு மீளளிப்புச் செய்யப்படாத தொகை ரூபா 208,716 ஆகும்.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் மூலத்தின் பிரிவு 24 இன் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் சபைக்கு சொந்தமான பாதைகளை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு பகிரங்கப்படுத்த வேண்டும். எனினும் 2007 ஆண்டின் பின்னர் சபையினால் நிர்மாணிக்கப்பட்ட பாதைகள் தொடர்பாக அவ்வாறு செய்திருக்கவில்லை. சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பாதைகள் தொடர்பாக ஒவ்வொரு பாதையின் நீளம், அகலம் ஆரம்பிக்கும் இடம் முடிவடையும் இடம், தார், கொங்கிரீட், சரளைக்கல் என்றவாறு பாதையின் தன்மை, வீதிக் கோடு ஆகிய தகவல்கள் அடங்கக் கூடிய விதமாக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

---------------------------------------------

வீதி விளக்கு பராமரிப்பு

-------------------------------------

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட வீதி விளக்குகளின் எண்ணிக்கை 57 எனினும் வீதி விளக்கு விவரப் பதிவேட்டின் பிரகாரம் அதிகாரப் பிரதேசத்தில் 388 வீதி விளக்குகள் பராமரிக்கப்பட்டிருந்தன.

(ஆ) மின் சக்தி மற்றும் எரி சக்தி அமைச்சு செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 மற்றும் இலக்கம் பீஈ/01/01 சுற்று நிருபத்தின் பந்தி 1.4 இன் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வீதி விளக்குகளின் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை மற்றும் விளக்குகள் பொருத்தும் போது வீதி விளக்குகளின் மின்சார நுகர்வு அப் பிரதேசத்தில் காணப்படும் இல்லங்கள் மற்றும் மேலதிக சில்லறை நுகர்வுகளின் நூற்றிற்கு 3 இற்கு வரையறுக்கப்பட வேண்டும். எனினும் சபை இது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

3.3 மனித வள முகாமைத்துவம்

--------------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் பதவியணி மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவியின் வகைகள் | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட | 01 | 01 | - | - |
| மூன்றாம் தர | 02 | 01 | 01 | - |
| இரண்டாம் தர | 17 | 16 | 01 | 01 |
| ஆரம்ப தர | 20 | 21 | - | 03 |
| ஏனைய(அமைய, தற்காலிக, ஒப்பந்த) | - | 03 | - | |
| | 40 | 42 | 02 | 04 |

மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி ஆணையாளரிடம் இருந்து பதவியணி சம்பளம் ஆக ரூபா 9,037,900 மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது பதவியணி சம்பளம் மற்றும் படியாக ரூபா 11,227,080 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திற்கு ரூபா 2,189,180 இற்கான மேலதிக செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டுள்ளது.

4. கணக்கு விடயத் தன்மை மற்றும் நல்லாட்சி

-------------------------------------------------------------------

4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

----------------------------------------------------------------------

சபை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவியிருக்கவில்லை.

4.2 கொள்வனவுத் திட்டம்

---------------------------------

2006 ஜனவரி 25 ஆந் திகதிய இலக்கம் ஜா.பிர.நி/பிர.வி.நி/18 கொண்ட சுற்று நிருபத்தின் 42(ஆ) இன் பிரகாரம் சபையினால் மீளாய்வாண்டிற்காக கொள்வனவு திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்